

அரியலூர் மாவட்டம் ஆண்டிமடம் ஒன்றியம் தேவனூர் தமது சொந்த கிராமத்தில் 2026 சட்டமன்றத் தேர்தலை யொட்டி, தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா. சி.சிவசங்கர் தமது குடும்பத்தினருடன் தேவனூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் அமைந்துள்ள வாக்குச்சாவடி மையத்தில் வாக்களித்தார். உடன் சிவராஜேஸ்வரி சிவசுப்ரமணியன், எஸ்.எஸ். காயத்திரிதேவி சிவசங்கர், எஸ்.எஸ். சிவகுமார், எஸ்.எஸ்.விசாலாட்சி சிவகுமார் ஆகியோர் ஜனநாயக கடமை ஆற்றினார்கள்.



சேலம் வடக்கு சட்டமன்ற கழக வேட்பாளர். மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் இரா. இராஜேந்திரன் தனது குடும்பத்தினருடன். சி எஸ்.ஐ பாலிடெக்னிக் கல்லூரியில் அமைக்கப்பட்டிருந்த வாக்கு சாவடியில் வாக்களித்தார்.



திண்டுக்கல் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் இ.பெ. செந்தில்குமார் தனது மனைவி மெர்சி செந்தில்குமாருடன் தனது வாக்கை பதிவு செய்தார்.



நாகர்கோவில் சட்டமன்ற தொகுதியில் மதச்சார்பற்ற முருக்கு முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர் – கழக துணை அமைப்புச் செயலாளர் எஸ். ஆஸ்டின் ஆத்திக்காட்டி விளைப் பகுதியில் உள்ள வாக்குச்சாவடியில் வரிசையில் நின்று தனது வாக்கிய பதிவு செய்தார்.



மதுரை வடக்கு தொகுதி கழக வேட்பாளர் மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்எல்ஏ திருப்பரங்குன்றத்தில் அமைந்துள்ள அரசு பள்ளியில் குடும்பத்தினருடன் சென்று தனது வாக்கினை பதிவு செய்தார்.



காட்பாடி சட்டமன்றத் தொகுதியில் கதிர்ஆனந்த் எம்.பி. குடும்பத்தினருடன் காட்பாடி காந்தி நகரில் உள்ள டான்பாஸ்கோ பள்ளியில் தனது வாக்கை செலுத்தினார்.



சிவகங்கை மாவட்டம் கண்டனூர் சிட்டாள் ஆச்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் கார்த்தி, சிதம்பரம் எம்.பி. மற்றும் திருமதி ஸ்ரீநிதி அவரது புதல்வி ஆகியோருடன் வாக்கினை பதிவு செய்தார்.

# தமிழ்நாட்டில் ஏப்.26ஆம் தேதி வரை வெப்பம் நீடிக்கும்!

புதுடெல்லி,ஏப்.24-

வடமேற்கு, மத்திய மற்றும் கிழக்கு இந்தியாவின் முக்கிய பகுதிகளில் அடுத்த நான்கு முதல் ஐந்து நாட்களுக்கு வெப்ப அலை நிலவக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்தியாவில் பஞ்சாப், ஹரியாணா, சண்டிகர் மற்றும் டெல்லியின் சில பகுதிகளில் ஏப்ரல் 24 மற்றும் 25 ஆகிய தேதிகளில் வெப்ப அலை நிலவ வாய்ப்புள்ளது என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: மேற்கு உத்தரப் பிரதேசத்தில் ஏப்ரல் 23 முதல் 25 வரையிலும், கிழக்கு உத்தரப் பிரதேசத்தில் ஏப்ரல் 22 முதல் 26 வரையிலும், ராஜஸ்தானில் ஏப்ரல் 24 முதல் 26 வரையிலும், மத்தியப் பிரதேசத்தில் ஏப்ரல் 23 முதல் 26 வரையிலும், விதர்பா மற்றும் சத்தீஸ்கரில் ஏப்ரல் 24 முதல் 27 வரையிலும், மேற்கு வங்கம், பிஹார் மற்றும் ஜார்க்கண்டில் ஏப்ரல் 22 மற்றும் 23 ஆகிய தேதிகளிலும் வெப்ப அலை நிலவக் கூடும்.ஒடிசா, கடலோர ஆந்திரப் பிரதேசம், ஏனாம், மேற்கு வங்கம், தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால், கேரளா, மாஹே, கடலோர கர்நாடகா மற்றும் குஜராத்தின் கடலோரப் பகுதிகளின் ஆங்காங்கே உள்ள சில இடங்களில் ஏப்ரல் 22 முதல் ஏப்ரல் 25 வரையிலான காலகட்டத்தில் வெப்பமான வானிலை நிலவக்கூடும்.

இந்தக் காலகட்டத்தில், ஹரியாணா, சண்டிகர், டெல்லி, ஒடிசா, கொங்கண் மற்றும் கோவாவில் இரவுகளிலும் வெப்பமான வானிலை இருக்கக் கூடும்.

இதற்கிடையில், வடகிழக்கு மற்றும் கிழக்கு இந்தியாவின் சில பகுதிகளில், இந்த வாரத்தில் இடியுடன் கூடிய மழை மற்றும் மின்னலுடன் கூடிய கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

'தமிழகத்தின் உள் மாவட்டங்களில் இன்று முதல் 26ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை ஒரு சில இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாக இருக்கக் கூடும். கடலோர தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை வழக்கமான அளவை ஒட்டியே இருக்கக்கூடும்' என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## முனைவர் ம.இராசேந்திரன் வரவேற்புரை! ப.சிதம்பரம் எம்.பி. தலைமையுரை!

# 'தமிழியல் கலைக் களஞ்சியம்' வெளியீட்டு விழா!

## முனைவர் ம.திருமலை நூலை வெளியிட – சு.வெங்கடேசன் எம்.பி. பெறுகிறார்!

மதுரை, ஏப்.24-

தமிழ் வளர்ச்சிக் கழகம் சார்பில் 'தமிழியல் கலைக் களஞ்சியம்' வெளியீட்டு விழா நாளை (25.4.2026) மாலை 5.00 மணியளவில் கலைஞர் நூற்றாண்டு நூலகம், மதுரையில் நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் முனைவர் ம.இராசேந்திரன் வரவேற்புரையாற்றுகிறார்.

தமிழ் வளர்ச்சிக் கழக அறங்காவலர் குழுத் தலைவர் ப.சிதம்பரம் எம்.பி. தலைமையுரையாற்றுகிறார்.

தமிழ்ப் பல்கலைக் கழக மேனாள் துணைவேந்தர் முனைவர் ம.திருமலை நூலை வெளியிடுகிறார். சு.வெங்கடேசன் எம்.பி. நூலை பெற்றுக் கொள்கிறார்.

தமிழ் வளர்ச்சிக் கழக பொருளாளர் பேராசிரியர் சா.சரவணன் நன்றி கூறுகிறார்.

இவ்விழாவில் தமிழ் வளர்ச்சிக் கழக அறங்காவலர் குழு, ஆட்சிக் குழு, பொதுக் குழு உறுப்பினர்கள் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.



விராலிமலை சட்டமன்ற தொகுதி கழக வெற்றி வேட்பாளர் கே. கே.செல்லப்பாண்டியன் கீரனூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் தனது வாக்கை பதிவு செய்தார்.


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா புலவர் வேங்கைமார்பன்

ஏப்ரல் 24 (1985)



அன்றைய தென்னார்க்காடு மாவட்டத்தின் கழகப் பிரச்சாரக்குழு தலைவராகப் பணியாற்றியவர்.

தந்தை பெரியார், அறிஞர்அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் அன்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த பல்வேறுப் போராட்டங்களில் பங்கேற்றதுடன், 1965இல் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்று, வேலூரில் ஓராண்டு சிறைவாசமும் – நெருக்கடி காலத்தில் மிசா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சென்னையில் ஓராண்டு சிறைவாசமும் அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ்.ஐ. வெங்கட்ராமன்

ஏப்ரல் 24 (2020)



தி.மு.கழகம் தொடங்கிய போதே உறுப்பினராகி கழகப் பணியாற்றியவர்.

திருவொற்றியூர் நகர அமைப்பு துவங்கப்பட்டபோதே, அதன் முதல் செயலாளராகவும் – ஒருங்கிணைந்த செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டக் கழக அவைத்தலைவர், துணைச் செயலாளர், பொருளாளர் என பல்வேறு பொறுப்புகளையும் வகித்தவர்.

திருவொற்றியூர் எண்ணூர் தொழிற்சங்கப் பேரவையை முதன்முதலாக துவக்கியதோடு, நகர்மன்ற துணைத் தலைவராகவும் – காஞ்சிபுரம் கூட்டுறவு வங்கி, சைதாப்பேட்டை நிலவள வங்கி, அறிஞர் அண்ணா பட்டுக் கூட்டுறவு சங்கம் ஆகியவற்றில் இயக்குநராகவும் இருந்தவர்.

"திசை மாறாத பறவை" என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பாராட்டப் பெற்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.